**செய்தி வெளியீடு எண் : 265** **நாள் : 08.02.2023**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களால் கடந்த ஆண்டு 2021-22ஆம் மானியக் கோரிக்கையில் "டான்சி நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சந்தைப்படுத்த ஒரு பிரத்யேக காட்சியகம் (Showroom cum Sales Centre) மற்றும் மின் வணிக இணைய முகப்பு (e-Commerce Online Portal) ஆகியன ரூ.3 கோடி செலவில் உருவாக்கப்படும்" என அறிவிக்கப்பட்டது.

இவ்வறிவிப்பினை நிறைவேற்றும் வகையில் இன்று (8.2.2023) மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் டான்சி நிறுவனத்தினால் புதியதாக நிறுவப்பட்ட காட்சியக விற்பனை கூடத்தை திறந்து வைத்தும் (Showroom cum Sales Centre), மின் வணிக இணைய முகப்பை (e-Commerce Online Portal) தொடங்கியும் வைத்தார்கள்.

இதன்மூலம், பொதுமக்களும், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களும் டான்சி தயாரிப்புகளை பார்வையிட்டு வாங்கி செல்ல வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

டான்சி நிறுவனம் கடந்த 2 ஆண்டுகளாக குறிப்பாக 2021-22ஆம் நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்ட ரூ.100 கோடி இலக்கை தாண்டி ரூ. 114.05 கோடி மதிப்பில் அரசு துறைகள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து ஆணைகள் பெற்றுள்ளது. நடப்பு ஆண்டு 2022-23-ல், ஜனவரி மாதம் வரையில் சுமார் ரூ.100 கோடி அளவிற்கு ஆணைகளைப் பெற்றுள்ளது.

டான்சி நிறுவனம் கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு நடப்பாண்டில் (2022-23) இன்று வரை ரூ. 125 கோடி மதிப்பிற்கு தன்னுடைய அலகுகளில் உற்பத்தி செய்துள்ளது. மேலும், டான்சி நிறுவனம் அரசு இ-விற்பனை முகமையில் (GEM PORTAL) பதிவுசெய்து கொள்முதல் மற்றும் விற்பனை சேவைகளை தொடங்கி உள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பள்ளிக்கல்வித்துறை மூலம் செயல்படுத்தப்படும் "நம்ம School" என்கின்ற திட்டத்திற்கு டான்சி நிறுவனம் ரூ.4 கோடியினை நன்கொடையாக அளித்துள்ளது.

மேலும், இந்நிகழ்ச்சியின் போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டான்சியில் பணியிலிருந்த போது உயிர் நீத்த பணியாளர்களின் வாரிசுதாரர்கள் மூவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் டான்சி நிறுவனத்தின் முதன்மைச் செயலர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு ச.விஜயகுமார், இ.ஆ.ப., MSME அரசுத்துறை செயலர் திரு. வி. அருண் ராய், இ.ஆ.ப., டான்சி நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in